பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஹு கார்த்திகை மீ 04 வ செவ்வாய்க்கிழமை (20 11 1990) ஹிஜ்ரி 1410 ற ஆகிர் 10 கதிர் 258

# மாவிட்டபுரம் பகுதியில் மினி முகாம் நிர்மூலம்!

## ஆயுதங்களும் புலிகளால் மீட்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 20

மாவிட்டபுரம் - கீரிமலை வீதியில் தச்சன்காட்டுப் பகுதியில் இருந்த மினி முகாம் ஒன்று நேற்று அதிகாலை ஒரு மணியளவில் விடுதலைப் புலிகளினால் நிர்மூலமாக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் பலரக ஆயுதங்களைக் கைப்பற்றினர்.

தாக்குதலில் சிக்கி பல இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்றும் -

மினி முகாம் பகுதி தாக்குதலையடுத்து தீப்பற்றி எரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் மணிமேகன் [இராசையா அநுரா - சண்டிலிப்பாய் தெற்கு] வீரமரணமடைந்தார். [உ]

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், நவ. 20

தச்சன்காட்டுச் சந்தி மினி முகாம் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் பொருள்களின் விவரம் வருமாறு:-

- ★ ஆர்.பி ஜி - 1
- ★ ஆர்.பி ஜி ஷெல் - 21 [இதில் டாங்கிஎதிர்ப்பு ஷெல் - 14, மற்றைய ஷெல் - 07]
- ★ ஏ.கே.எல் எம்.ஜி - 01
- ★ அதற்குரிய மகசின - 05
- ★ ஜி.பி எம். பரல் - 01
- ★ ரி- 56ரகதுப்பாக்கி - 01
- ★ ரி - 56 - 1 ரக துப்பாக்கி - 01
- ★ அதற்குரிய மகசீன் - 06
- ★ புளட்புறூ ஜக்கட் - 03
- ★ கிரனைட்ஜே ஞ்: ரகம் - 07
- ★ ரைபிள் கிரனைட் - 04
- ★ நேட்டோ ரவைகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உதவ கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 20

தென் தமிழீழத்து மக்களின் துயர் துடைக்க பணம், புதிய பாத்திரங்கள், புதிய ஆடைகள் வழங்கி உதவுமாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

பிரதேச பொறுப்பாளரால் நியமிக்கப்பட்ட தொண்டர்கள் மாவீரர் வாரத்தில் வீடுகளுக்கு வருவர் என்றும்-

அப்போது தமிழீழ மக்கள் உதவியை நல்கி தங்களது பங்களிப்பைச் செலுத்துமாறும் விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர். (ஓ)

## குடியிருப்பு மீது ஷெல் வீச்சு!

யாழ்ப்பாணம், நவ. 20

பலாலி, காங்கேசன்துறை முகாம்களில் இருந்தும் கடற் பகுதியில் இருந்தும் நேற்று முன்தினம் (ஞாயிறு) நள்ளிரவு முதல் மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமாக ஷெல், பீரங்கி தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கொல்லங்கலட்டி, வசந்தபுரம், கீரிமலை, கருகம்பானை, சேந்தாங்குளம், இளவாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, மல்லாகம் போன்ற பகுதிகளில் ஷெல் மற்றும் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன.

இதனால் இந்தப் பகுதிகளில் பல வீடுகள் சேதமடைந்தன. பொதுமக்கள் பலர் காயமடைந்தனர்.

காயமடைந்த சிலர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

அமலராசா வசந்தராசா (16 வயது) மல்லாகம், நாகன்

[4ஆம் பக்கம் பார்க்க]

## வலி. வடக்கில் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு

வலி வடக்குப்பகுதியில் நேற்றுக் காலை 7-45 மணியளவில் நான்கு பொம்மர்கள் கண்டபடி கண்டவாறு குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

புன்னாலைக் கட்டுவன், குப்பிளான் பகுதிகளில் பொம்மர்கள் குண்டுகளை வீசித் தள்ளின.

கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான், ஒட்டகப்புலம் பகுதிகளிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன. இப்பகுதிகளில் பொம்மர்கள் றொக்கட் தாக்குதல்களையும் மேற்கொண்டன.

சி-பிளேன் ஒன்றும் இப்பகுதிகளைச் சுற்றிச் சுற்றி வேவு பார்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது. (ஓ-68)

## பருத்தித்துறை, புலோலியில் நேற்று மொம்மர்கள் அகோரக் குண்டு வீச்சு

### பெண் பலி; பாடசாலை, வீடுகள், கட்டடங்கள் சேதம்

புலோலி, நவ. 20

பருத்தித்துறை, புலோலிப் பகுதிகளில் நேற்று இரு தடவைகள் பொம்மர்கள் அகோரக் குண்டு வீச்சுக்களை நடத்தின. பத்துக்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன.

ஓராங்கட்டையில் குண்டு வீச்சுக்கு இலக்காகி பெண் ஒருவர் பலியானார்.

உயிரிழந்த பெண் சுமார் 35 வயது மதிக்கத்தக்கவர் இவரது பெயர், விவரம் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. இவர் மயிலிட்டியில் இருந்து கரவெட்டிக்கு அகதியாக வந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

**மந்திகையில்**

மந்திகை மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கக் கிளைக் கட்டடங்கள், ஒரு லொறி மற்றும் பல வீடுகள் என்பன சேதமடைந்தன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இறங்குதுறைப் பகுதியிலும் குண்டு வீச்சுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 20

பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியில் - '' பாதுகாப்பு வலய '' மாகக் கணிக்கப்பட்டு வந்த பிரதேசத்திற்குள்ளும் நேற்றுக் காலை பொம்மர்கள் குண்டுகளை வீசின.

இறங்குதுறையில் இருந்து 500 மீற்றருக்கு உட்பட்ட இந்தப்பகுதியில் 8.30 மணிக்கு

[4ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழ தேசியக் கொடி நாளை காலை ஏற்றப்படும்

யாழ்ப்பாணம், நவ. 20

மாவீரர் வாரம் நாளை தொடக்கம் ஒரு கிழமைக்கு தமிழ்ப் பகுதிகளில் கொண்டாடப்பட உள்ளது.

அதனையொட்டி நாளை காலை 9 மணிக்கு பிரதான இடங்களில் தமிழீழ தேசியக் கொடி ஏற்றி வைக்கப்படும்.

விடுதலைப் புலிகளின் அனைத்து முகாம்கள், பாசறைகள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அனைத்துச் செயலகங்கள், பாடசாலைகள், திணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், தொழிற்சாலைகள், ஏனைய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தேசியக் கொடி ஏற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில் ஏவிய ஷெல் பொன்னாலையில் விழுந்தது

காரைநகர். நவ, 20

காரைநகர் படையினரும் நேற்றுமுன்தினம் (ஞாயிறு) இரவு ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பொன்னாலை கிருஷ்ணன் கோயில் பகுதி, பெரிய மதவடி மற்றும் வயல் வெளிகளில் ஷெல்கள் வீழ்ந்துவெடித்தன. (ஓ)

**இனப்பிரச்சினைக்குப் பேச்சு:**

## சர்வதேச நாடுகள் தயார்; ஆனால் இந்தியாவே தடை!

### ஆயர் மன்றப் பிரதிநிதி கவலை

யாழ்ப்பாணம், நவ 20

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு இலங்கை அரசுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு சர்வதேச நாடுகள் பல தயாராக இருக்கின்றன ஆனால் இந்தியா அதனை விரும்பாததுடன் தடையாகவும் உள்ளது.

இப்படிக் கூறுகிறார் ஆசிய ஆயர் மன்ற இலங்கைக்கான ஆலோசகர் வண. எஸ் ஜே. இம்மானுவேல்.

லண்டன், ஜேர்மனி, ஜெனிவா உட்பட்ட பல வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பிய அவர் இத்தகவலைப் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

[4ஆம் பக்கம் பார்க்க]

## தாட்சரின் தலைவிதி இன்று தெரியவரும்

லண்டன், நவ. 20

பிரிட்டிஷ் பிரதமர் மார்க்கிரட் தாட்சர் தமது பதவியில் தொடர்ந்து நீடிப்பாரா என்பது இன்று முடிவுசெய்யப் படுகிறது.

அவருக்கும் முன்னாள்பாதுகாப்பு அமைச்சர் மைக்கல் ஹெஸல்டைனுக்கும் இடையில் ஆளும் கட்சித் தலைமைப்பதவிக்கான பலப் பரீட்சை இன்று நடைபெறுகிறது.

இதற்கான முதற்கட்ட வாக்களிப்பில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியில் உள்ள 372 எம்.பிக்கள் இன்று வாக்களிக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### மூக்குப் பொடி

மிகத்தரமான காரம், மணம். குணம் நிறைந்த மூக்குபொடி சாதாரண வாசனையூட்டிய வகைகளில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:- V K தேவகுருநாதன் 142, ஆடியபாத றோட், (கல்வியங்காடு சந்தையில் இருந்து 75 யார் தூரத்தில் உள்ளது.) யாழ்ப்பாணம். (14792)

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விஷேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல. 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (14550)

எஞ்சின் 10 H Power Ceegee எதற்கும் பவிக்கக் கூடியது உடன் விற்பனைக்கு உண்டு. சிவம் மில் மானிப்பாய் வங்கிக்கு முன்பாக மானிப்பாய். (14811)

### லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பெனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன், நத்தார் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகிறது என்பதை எமதுவாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். [சி/5402]

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் கிளை: பிரதான வீதி, மானிப்பாய். (C/5398)

### 'நிலவே நீ மயங்காதே'

மீரா வெளியீடு இந்திரா பிரியதர்ஷினி எழுதியது தவிக்கும் பெண்மனம் தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண் மனங்களை இந்நாவலில் சந்தியுங்கள். துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம். திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர். [14804]

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் பாடசாலை மாணவர்களிலிருந்து அரச கூட்டுத்தாபனங்களில் வேலை செய்வோர் வரையிலானவர்களுக்கு ஆரம்ப அறிவிலிருந்து ஆங்கிலம் தனிப்பட்ட முறையில் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். விபரங்களுக்கு (நேரில் அல்லது கடித மூலம்) S. ஜெயராஜா, 204 மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (14809)

### தவறிவிட்டது

புகையிரதப் பகுதி மக்கள் வங்கி மருதானை என எழுதப்பட்ட ரூ. 1500 பெறுமதியான சம்பளக் காசோலை உடுவிலுக்கும் சந்தரோடைக்கும் இடையில் தவறிவிட்டது எடுத்தவர்கள் தயவு செய்து T சின்னராசா கந்தரோடை (குளத்தடி) மேற்கு என்ற முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் தரப்படும். (14813)

# தேசிய வீடமைப்பு சபையின் முல்லை அலுவலகம்இடம்மாறும்

யாழ்ப்பாணம், நவ 20 கடந்த ஐந்து மாதங்களாக இயங்காதிருக்கும் கண்டி வீதி, மாங்குளத்தில் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முல்லைத்தீவு மாவட்டக் காரியாலயத்தை தற்காலிகமாக துணுக்காய் அல்லது மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு இடமாற்றம் செய்வதற்கு கொழும்பு தலைமைக் காரியாலயம் அனுமதி வழங்கியுள்ளது

முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் திரு. கே. ரி. எம். விஜயகுமார் அண்மையில் கொழும்பு சென்று இந்த அனுமதியைப் பெற்று வந்துள்ளார்

இது தொடர்பான விஷயங்கள் பற்றி ஆலோசிப்பதற்காக தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் முல்லைத்தீவு மாவட்ட ஊழியர்கள் நாளை 21 ஆம் திகதி புதன் கிழமை காலை 9-00 மணிக்கு கொக்குவிலில் உள்ள முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் திரு. விஜயகுமாரின் இல்லத்தில் கூட உள்ளனர். [இ-எ]

## சுன்னாகம் ப. நோ. கூ. ச.

# உணவு முத்திரைப் பொருள்

யாழ்ப்பாணம், நவ, 20 சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் உணவு முத்திரைப் புள்ளி இலக்கம் 4க்குரிய பொருள்களைப் பாவனையாளருக்கு வழங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளது. உணவு முத்திரை வைத்திருப்பவர்கள் தங்கள் கிளைகளுடன் தொடர்புகொண்டு பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

பாதுகாப்புக்கருதி மூடப்பட்ட கிளைகள் 21, 21ஏ, 20. 20பி, 22இல் உணவு முத்திரை வைத்திருந்த பாவனையாளர்கள் தங்கள் உணவு முத்திரைகளுக்குரிய பொருள்களைப் பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கிளை 21 க்குரியவர்கள் உடுவில் கிளை 7 உடன் இணைந்த கட்டடத்திலும், 21 ஏ க்குரியவர்கள் இணுவில் சந்தியடியிலும், கிளை 20, 20பி க்குரியவர்கள் இணுவில் கந்தசாமி கோவிலடியிலும், கிளை 22 க்குரியவர்கள் கிளை 23 ஏழாலைக் களவாவோடையிலும் பெற்றுக்கொள்ளலாம்

மேற்சொல்லப்பட்ட கிளைகளின் பாவனையாளர்கள் தங்களுக்குரிய உலர் உணவுப் பங்கீட்டுப் பொருள்களையும் சொல்லப்பட்ட இடங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று சுன்னாகம் பல. நோ. கூ. சங்கப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். [இ]

## சுன்னாகம் தபாலகம்

சுன்னாகம் தபாலகம் மீண்டும் வழமைபோல் இயங்குகிறது. அண்மையில் தபாலகம் மீது நடந்த விமானத்தாக்குதலை அடுத்து தபாலகம் மூடப்பட்டிருந்தது தெரிந்ததே. (இ-9)

### தென்னிந்திய திருச்சபை - யாழ் ஆதீனம் குடும்பத் தலைவரை இழந்த விதவைகளுக்கான நிவாரணம்

(11 06-1990 இற்குப் பின்னர் யுத்த காரணத்தால் பாதிக்கப்பட்டோருக்கு மட்டும்)

மேற்படி நிவாரணம் சம்பந்தமாக விண்ணப்பங்கள் ஏற்றுச் கொள்ளப்படுகின்றன. பாதிப்படைந்த மனைவிமார் 21-11-90 தொடக்கம் 27-11-90 வரை தங்கள் விண்ணப்பங்களை பின்வரும் இடங்களில், பின்வரும் ஆவணங்களுடன் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

ஆவணங்கள்:-

1. இறப்புச் சாட்சிப் பத்திரம்
2. விண்ணப்பதாரியின் விவாகச்சாட்சிப் பத்திரம்
3. பிள்ளைகள் பற்றிய விவரங்கள்
4. விண்ணப்பத்தாரியின் அடையாள அட்டை
5. மேற் கூறியவற்றை உறுதிப்படுத்தும் கிராம சேவகர், உதவி அரசாங்க அதிபர் மற்றும் பொறுப்பு வாய்ந்தோரின் பத்திரம்

பதிவு செய்யும் இடங்கள்:-

1. ஆதீன காரியாலயம், தென்னிந்திய திருச்சபை, வட்டுக்கோட்டை.
2. திருமறை இல்லம், (அமெரிக்கன் மிஷன் அச்சகம்), 162, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
3. கிறிஸ்து அரசர் ஆலயம், தென்னிந்திய திருச்சபை, கிளிநொச்சி.
4. பரி. யோவான் ஆலயம், ஊரணி, மட்டக்களப்பு.

ஆதீன காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(14796)

### 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



அமரர்
**சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம்**
(கணக்காய்வாளர்)
காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்

அன்னை மடியில்:
14 — 01 — 1935
அரக்கன் அழிப்பில்:
12 — 10 — 1990

நித்தியமாய்
மிளிர்ந்த காலம்
மங்கும் ஷெல் குண்டு
மாள்கவலைச்
செய்ததுவே
எங்கள் தெய்வமே!
அப்பாவே!
தனிமையில் எம்மை
கதறவிட்டு
நீண்ட துயில்
கொண்டதேனோ

அன்னாரின் இல்லத்தில் 21 - 11 - 90 புதன் கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அவரின் ஆத்மா சாந்திக்காக வேண்டி நிற்கும்.

மனைவி, மக்கள்.

இணுவில்
ஆஸ்பத்திரியடி,
இணுவில்.

[14815]

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



அன்னையின் மடியில்:
05 - 09 - 1968

ஆண்டவன் அடியில்:
07 10 - 1990

## அரிச்சந்திரா - சந்திரயோகன்

பிரான்ஸ் நாட்டில் அகால மரணமடைந்த எமது மறக்கமுடியாத அன்பு மகனே! பொன்னொளி மாலைப் புழுடம் பணிந்து தண்ணொளி பரப்பும் தகைசால் மைந்தனை கண்ணாற் காணாது கதறி அழுகிறோம். எந்நாளும் எம்மனதில் ஏற்றிய தீபமாய் அற்புத வடிவில் அமைந்தாய், எம்மனதில் உன் ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை அன்புடன் வணங்கித் துதிக்கிறோம்.

அரிச்சந்திராவும் குடும்பத்தினரும்.
சந்திர கோட்டம்,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

(14798)

உ

# ★ திருமண அழைப்பிதழ் ★

நிகழும் பிரமோதூத ஆண்டு கார்த்திகைத் திங்கள் 6ஆம் நாள் (22 - 11 - 1990) வியாழக்கிழமை பகல் 12. 35 முதல் 1 10 வரையுமுள்ள கும்பலக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது புதல்வன்
திருவளர் செல்வன்
**முருகவேள்**
(கப்பல் உப தளபதி)

எமது புதல்வி
திருவளர் செல்வி
**சாந்தகுமாரி**
(ஆசிரியை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி)

வல்வெட்டித்துறை நெடியகாட்டு விநாயகர் ஆலயத்தில் நடைபெற இருக்கும் திருமணத்திற்கும், மணமகள் இல்லத்தில் நடைபெற இருக்கும் விருந்துபசாரத்திற்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், சுற்றம்சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி ம. வேலும்மயிலும்,
ஆலடி,
வல்வெட்டித்துறை.

திரு. திருமதி கதிர்காமதாசன்,
முதிரைக் கட்டை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

(14785)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இராணுவ ஆட்சியா?

வடக்கு - கிழக்கில் மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு எட்டு மாதங்களுக்குரிய மருந்து வகைகள் அனுப்பப்படவில்லை அது குறித்து மிக அண்மையில் தான் இப்பத்திகளில் எழுதியிருந்தோம்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மட்டக்களப்பு ஆகியமாவட்டங்களிலும் அத்தியாவசியமான மருந்து வகைகள் தானும் இல்லை அதனால் தமிழ் நோயாளிகள் பல கஷ்டங்களையும், உயிராபத்தையும் எதிர்நோக்க வேண்டியுள்ளனர்.

தமிழ்ப்பகுதிகளில் கடந்த ஆறு மாதங்களாக இடைவிடாத யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. யுத்தத்தை நடத்துவது அரசாங்கம்தான். அதனை அரசு நிறுத்துவதற்கான எவ்வித அறிகுறியும் இல்லை. யுத்தத்தைத் தொடர்வதன் மூலம், அதன் போர்வையில் தமிழ் மக்களின் தேவைகளைத் தடுத்து அவர்களைச் சலிப்படையச்செய்யலாம் என்ற உள்நோக்கம் அரசுக்கு உண்டு.

அதனாலேயே உணவு, மருந்து, பசளை, மின்சாரம் மற்றும் அத்தியாவசிய தேவைகளைத்தானும் தமிழர்கள் பூர்த்திசெய்ய முடியாதவாறு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. போரில் தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதற்கு மேலதிகமாக, அவர்களை எல்லாக் கோணங்களாலும் அழுத்தி, அமுக்கி நசுக்கவேண்டும் என்று அது நினைக்கிறது.

மருந்து வகைகளின் தேவை இப்போது அதிகம் என்பது தெரிந்தும், ஷெல், குண்டுவீச்சுக் காயங்களுக்கு ஆளாவோருக்குத் தேவைப்படும் மிக அத்தியாவசிய மருந்துகளைக்கூட, தமிழ் மாவட்டங்களுக்கு அரசு அனுப்பாது நொண்டிச்சாட்டுகளைக் கூறிவருகிறது. தமிழ்ப் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு மருந்து அனுப்புவதற்கும் கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கவேண்டும் என்ற கட்டுப்பாடு- இல்லை, இல்லை தடை- விதிக்கப்பட்டிருக்கிறது!

மருந்துக்கும் கூட்டுப் படைக்கும் என்ன சம்பந்தம்? படை அதிகாரிகள் இராணுவத் திட்டங்களை வகுக்க வேண்டியவர்கள். தங்கள் ஆளாயினரை நிர்வகித்துக் கருமம் ஆற்ற வேண்டியவர்கள். அவர்களுக்கும் சிவில் நிர்வாகத்துக்கும் என்ன தொடர்பு?

இராணுவமோ அல்லது முப்படையோ சிவில் நிர்வாகத்தை நடத்துவதானால், வடக்கு - கிழக்கில் இராணுவ ஆட்சி நடக்கிறது என்று தானே அர்த்தம் கொள்ள வேண்டும்?

இந்த உண்மையை அரசாங்கம் பச்சைப்படியே வெளிப்படையாக, வெளிநாடுகளுக்குச் சொல்லட்டும். அப்போதாவது மனித நேயத்துக்கும், கருணைக்கும், இரக்கத்துக்கும் முன்னுரிமை தரும் சர்வதேச அமைப்புகள், தமிழ்ப் பகுதிகளுக்கு மருந்துகளையேனும் நேரில் வழங்க வழி பிறக்கலாம்.

## புலிகளின் ஒலிப்பதிவு நாடா இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 20

விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவின் 2 ஆவது தயாரிப்பான 'வேங்கையின் விடுதலை வேதங்கள்' பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியாகியுள்ளது.

தமிழீழக் கலைஞர்களின் ஒருங்கிணைந்த முயற்சியால் தயாரிக்கப்பட்ட இந்த ஒலிப்பதிவு நாடாவின் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை உரும்பராயில் நடைபெறவிருக்கின்றது.

இந்த வெளியீட்டு விழா நிகழ்ச்சியில் கலைஞர்களும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய தலைவர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவர். (உ)

## றிம்மர் மண்டபத்தில் ஆராதனை

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின் ஞாயிறு ஆராதனை பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள றிம்மர் மண்டபத்தில் தற்போது நடைபெற்று வருகின்றது.

சமீபத்திய இராணுவ நடவடிக்கைகளால் தேவாலயம் சேதமடைந்ததும், தனியார் இல்லம் ஒன்றில் ஞாயிறு ஆராதனை நடத்தப்பட்டு வந்ததும் குறிப்பிடத் தக்கது [இ]

# அத்தியாவசியமாகக் கருதப்படும் மருந்துவகை அனுப்பக் கட்டுப்பாடு

### தட்டுப்பாடு நீடிக்க இதுவே காரணமாம்

யாழ்ப்பாணம், நவ. 20

தற்போதைய நெருக்கடி நிலையில் அத்தியாவசியமாகக் கருதப்படும் மருந்து வகைகளை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க சுகாதார அமைச்சு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது என்று கூறப்படுகிறது.

யுத்தகாலத்தில் ஏற்படும் காயங்களைக் குணமாக்க தேவையான மாத்திரைகள், பண்டேஜ், பஞ்சு போன்றவற்றுக்கு யாழ். போதனா வைத்தியசாலை உட்பட மற்றைய வைத்தியசாலைகளிலும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இது சம்பந்தமாக வைத்தியசாலை அதிகாரிகளிடம் விசாரித்த போது, "வழமையாக எமக்குத் தேவையான மருந்துவகைகளுக்கான பட்டியல்களைச் சுகாதார அமைச்சிடம் சமர்ப்பிப்போம். 5 ஆயிரம் மாத்திரைகள் கேட்டால் ஆயிரம் மாத்திரைகளை மட்டுமே தருகிறார்கள்; முக்கிய அவசர தேவைகளுக்கான மாத்திரைகளுக்குத்தான் இந்தக் கட்டுப்பாடு அதிகம். குறைந்த அளவில் தேவைப்படும் மாத்திரைகளைக் கேட்டால் கேட்கும் அளவிலும் பார்க்க பலமடங்கு அதிகமாக வழங்குகிறார்கள்" என்றனர். (இ - 3 - 5)

## பாஸ்போர்ட் மோசடியை கண்டு பிடிக்க இயந்திரம்

கொழும்பு, நவ. 20

பாஸ்போர்ட்டில் மேற்கொள்ளப்படும் மோசடிகளைக் கண்டுபிடிக்க நவீனரக இயந்திரம் ஒன்று கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பொருத்தப்பட இருக்கிறது.

நெதர்லாந்து அரசாங்கத்தால் அன்பளிப்பாக இந்த இயந்திரம் வழங்கப்படுகிறது.

அத்துடன் விசாக்களில் மேற்கொள்ளப்படும் மோசடிகளையும் இந்த இயந்திரம் கண்டுபிடிக்குமாம். (இ-3)

## முறிவு - நெரிவு கிளினிக் இயங்க முடியாத நிலையில்

யாழ்ப்பாணம், நவ. 20

யாழ். போதனா வைத்தியசாலை மீள இயங்க ஆரம்பித்துள்ள போதிலும் முக்கிய கிளினிக்கான முறிவு நெரிவுக் கிளினிக்குகள் இயங்கமுடியாத நிலையில் உள்ளன.

கடந்தகால அசம்பாவிதங்களின் போது வைத்தியசாலை இயங்கமுடியாது மூடப்பட்டகாலங்களில் வைத்தியசாலையின் மிக முக்கிய பல பொருள்கள் காணாமற் போய் இருந்தன.

அவற்றில் மேற்படி கிளினிக்கின் அத்தியாவசிய தேவைக்குரிய மின் கருவிகளும் அடங்கும்.

மேலும் இக்கிளினிக்குகள் சம்பந்தமான மின்சார இணைப்பு மற்றும் திருத்த வேலைகள் இன்னும் முடிவுறாத நிலையிலேயே உள்ளன. (இ-15)

## காரைநகர் கிராமசேவகர்கள்

யாழ்ப்பாணம், நவ. 20

காரைநகர்ப் பகுதியில் உள்ள கிராமசேவகர் பிரிவுகள் சங்கானை உதவி அரச அதிபர் பிரிவின்கீழ் தற்காலிகமாக இயங்க உள்ளன.

நிவாரண வேலைகள் போன்ற முக்கிய அலுவல்களைக் கவனிக்க வசதியாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகர்ப் பகுதி, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் அடங்குகிறது

ஊர்காவற்றுறையில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பதால் அது இப்போது சுருவிலில் இயங்கி வருகிறது; கிராம சேவகர்கள் அங்கு அடிக்கடி போய் வரமுடியாதுள்ளதாலேயே இந்தத் தற்காலிக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [ஒ-30]

## வலி நிவாரண மருந்திற்கு வவுனியாவில் படையினர் தடை

வவுனியா, நவ 20

வலி நிவாரணி மருந்து வகைகளை வவுனியா நகரில் விற்பனை செய்ய படையினர் தடை செய்துள்ளனர்.

வவுனியா நகரில் கடைப் பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி படையினர் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு:

★ வாகனங்களுக்கு பாவிக்க பயன்படும் கிளச் பிளேட்டுக்கள் விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது.

★ கிரேப் வகை சப்பாத்துக்களும் விற்பனை செய்யப் படக் கூடாது.

★ அநுராதபுரத்தில் இருந்து வரும் பயணிகள் பஸ்களை நகர பஸ் நிலையத்துக்கு அனுமதித்தல்.

★ யூறியா உரம் மீதான தடையை தொடர்ந்து அமுல் செய்தல்.

★ வவுனியா கடைகளை காலை முதல் மாலை 5மணி வரை திறக்க அனுமதி வழங்கல், (இ-3)

# நாளை தொடக்கம் ஒரு வாரத்துக்கு தமிழீழமெங்கும் மாவீரர் பெருவிழா

1982 நவம்பர் 27 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முதல் வேங்கை களப் பலியான நாள். சத்திய நாதன் [சங்கர்] என்ற முதல் மாவீரன் அன்று தான் வீரமரணம் அடைந்தான். அந்த நாளே தமிழீழம் எங்கும் தேசிய தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டு மாவீரர் நாளாகக் கொண்டாடப் படுகிறது

### தேசியக்கொடி ஏற்றல்

மாவீரர் தினத்தையொட்டிய தேசியக்கொடி ஏற்றும் வைபவம் மாவீரர் நாள் ஆரம்பமாகும் நாளை 21ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இடம்பெறும். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம். மாவட்டச் செயலகம் பிரதேசச் செயலகம், விடுதலைப் புலிகளின் முகாம்கள், பாசறைகள், துணைச் செயலகங்கள், பாடசாலைகள், சன சமூகநிலையங்கள், தொழிற் சாலைகள், சமூக அபிவிருத்தி நிலையங்கள், மாதர் நிலையங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்கள் மற்றும் மக்கள் கூடும் கேந்திர நிலையங்கள் போன்ற சகல தகுதி வாய்ந்த இடங்களிலும் கொடிகள் ஏற்றி வைக்கப்படுவதிலிருந்து மாவீரர் வாரம் ஆரம்பமாகும்.

### மாவீரர் நிகழ்ச்சிகள்

மாவீரர் வாரமான ஏழு நாட்களும் நினைவுக்கூட்டங்களும், பட்டிமன்றங்களும், கவியரங்குகளும், கலைநிகழ்வுகளும், மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவித்தல் போன்ற நிகழ்வுகளும், மரம் நடுதல், சமூக சேவைகள் செய்தல், வீதிகளுக்கு மாவீரர்களின் பெயர்களைச் சூட்டுவது போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும்,

### அலங்காரம்

இந்த ஒரு வாரமும் தமிழீழத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் யாவும் மிகவும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும். சனசமூக நிலையங்கள், சிற்றூரவைகள், வட்டவைகள் மூலமாக வீதிகள், சந்திகள், ஒழுங்கைகள், நிறுவனங்கள், கடைகள் யாவும் அலங்காரம் பெற்றுத் திகழவேண்டும்.

### மாவீரர் சுடர் ஏற்றலும் நினைவொலி எழுப்பலும்

26 ஆம் திகதி நள்ளிரவு 12, 01 மணிக்கு சகல ஆலயங்கள், தேவாலயங்கள், நிறுவனங்கள் யாவற்றிலுமுள்ள பாரிய மணிகளை அசைப்பதன் மூலம் ஒரே சீராக மாவீரர் நினைவு ஒலி எழுப்பப் படவேண்டும் ஆனால் நேரம் சரியாக 12 01 மணி என்பதில் சமசீராக எங்கும் இருக்க வேண்டும். இந்த மணியொலி இரண்டு நிமிடங்கள் நீடிக்கும். இந்த இரண்டு நிமிடத்திலும் மறைந்த மாவீரர்களுக்காக எழுந்து சகலரும் மௌன அஞ்சலி செலுத்த வேண்டும் வீடுகளில் இருப்பவர்களும் எழுந்திருந்து இதனைச் செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தமிழீழத்தில் உள்ள சகல கோவில்களிலும், தேவாலயங்களிலும் நினைவு ஒலி எழுப்புவது கட்டாயமானது. நினைவுஒலி முடிந்ததும் மாவீரர் சுடர் ஏற்றுவது ஆரம்பமாகும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், அவ்வவ் மாவட்டத்தில் எத்தனை மாவீரர்கள் வீரமரணம் அடைந்தார்களோ அத்தனை தீப்பந்தங்கள் சுற்றி வட்டமாக சமசீராக நடப்பட்டு அழைத்து வரப்பட்டிருக்கும் மாவீரர்களின் பெற்றோர்களினாலும், குடும்ப அங்கத்தவர்களினாலும் கொளுத்தப்படும்.

### சமூக சேவைகள்

மாவீரர் நினைவாக அகதி முகாம்கள், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் குடியிருப்புக்கள், வீதிகள், குளங்கள் போன்ற இடங்களில் சிற்றூரவைகள், சன சமூக நிலையங்கள் போன்றவற்றின் கட்டுப்பாட்டிலும், கண்காணிப்பிலும் சிரமதானங்கள் செய்யப்பட வேண்டும். அவை ஒழுங்கமைக்கப்பட்ட திட்டத்தில் பிரதேசப் பொறுப்பாளரின் அனுமதியுடன் நடத்தப்பட வேண்டும்.

### நினைவுக் கூட்டம்

27 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவீரர் நினைவாக மாபெரும் பொதுக்கூட்டம்இடம்பெறும். இதில் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்களும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைவர்களும் உரையாற்றி நாட்டு மக்களுக்கு கருத்துரை வழங்குவர். இதன் பின்னர் இரவு 7.00 மணிக்கு தேசியக் கொடி இறக்கம் இடம் பெறும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த மாதம் முதல் இலவச உலர் உணவு

யாழ்ப்பாணம், நவ. 20

★ யாழ். மாவட்ட மக்களுக்கு நான்கு வார காலத்துக்குரிய இலவச உலர் உணவு விநியோகம் டிசம்பர் மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படும்.

★ அதேவேளை தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும்–இடம் பெயர்ந்தோருக்கான 4 ஆம் கட்ட நிவாரணம், தொழில் இழந்தோருக்கான 3 ஆம் கட்ட நிவாரணம் ஆகியவற்றை வழங்கும் வேலைகள் இம்மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைய வேண்டும்.

நிவாரண விநியோகம் சம்பந்தமாக யாழ். அரச அதிபர் தலைமையில் நேற்று செயலகத்தில் நடந்த கூட்டத்திலேயே மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. (உ-6)

## சர்வதேச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளைச் சந்தித்த வண. இம்மானுவேல் இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் குறித்து விளக்கினார்.

அந்தச் சந்திப்புகள் குறித்தும் பிரஸ்தாபிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் வெளிநாட்டவர்கள் பலரைச் சந்தித்து, தமிழர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள இனப் படுகொலைகள் குறித்து எடுத்து விளக்கினேன்.

கனடா, ஐரோப்பிய சமூக நாடுகள் உட்பட பல வெளிநாடுகள் எமது பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை அரசுடன் பேச்சு நடாத்தத் தயாராக இருக்கின்றன.

இந்தியா எமது பிரச்சினையில் தலையிட்டுள்ளதால் அந்த நாடுகள் தலையிடத் தயங்குகின்றன. ஏற்கனவே தான் தலையிட்ட விடயத்தில் ஏனைய நாடுகள் கலந்து கொள்வதை இந்தியா விரும்பவில்லை. அதனால் இந்தியா பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தப்போவதில்லை, தலையிடப்போவதில்லை என்று அறிவித்தால் மட்டுமே தாம் தலையிடலாம் என்று சர்வதேச நாடுகள் கருதுகின்றன.

ஆனால் இந்தியா இது விடயத்தில் எதுவித முயற்சியும் எடுக்காமல் இருக்கும் அதே வேளை, தனக்கு இதில் அக்கறை இல்லை என்றும் தெரிவிக்காமல் இருக்கிறது. இது சர்வதேச நாடுகள் இலங்கை விடயத்தில் கலந்துகொள்வதைத் தடை செய்வதாக அமைந்துள்ளது—என்றார். [அ-3]

## சிப்பாய் காலை இழந்தார்

கடந்த 11 ஆம் திகதி சந்தி வெளிப் பகுதியில் மிதிவெடியில் சிக்கி இராணுவச்சிப்பாய் ஒருவர் கால் இழந்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## மன்னாரில் வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 20

நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் மன்னார் தீவில் படையினருடன் நடந்தமோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான ஸ்ரனி வீரமரணமடைந்தார். [உ]

## ரயில்வே ஓய்வூதியம்

யாழ்–மாவட்டத்தில் உள்ள ரயில்வே ஓய்வூதியர்களின் ஜூன், ஜுலை மாதங்களுக்குரிய வவுச்சர்களை ஓய்வூதியர் சேமநலச் சங்க செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-3)

## ஹெலி சூடு

யாழ்ப்பாணம், நவ.20

வலி. வடக்குப் பகுதியில் நேற்று அதிகாலை ஹெலிகள் இலக்கு ஏதுமின்றி கண்டபடி தாக்குதல்களை நடத்தின.

சில பகுதிகளில் பரா வெளிச்சக் குண்டுகள் ஏவப்பட்டு, தாக்குதல்கள் நடத்தப்பட்டன. (ஓ-86-6)

## மீட்கப்பட்ட ஆயுத...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

– 1149

★ ஐ. எம். ரவைகள் – 8800

★ சப்பாத்து – 10 சோடி

★ பெல்ட் – 07

★ வைனட் – 01

★ கண்காப்புக் கண்ணாடி – 01

★ தண்ணீர்க் கான் – 04

★ ஹோல்சர் – 12

★ மோட்டார் பிரஷ் – 01

★ கிட்பாக் – 05

★ ஹெல்மட் – 02

★ தண்ணீர்க் குவளைகள் – 15

★ இராணுவ ஆவணங்கள் அடங்கிய சூட்கேஸ் பெட்டி ஒன்று.

## குடியிருப்பு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருநாவுக்கரசு (42 வயது) –வசந்தபுரம்.

காயமடைந்த இன்னும் சிலர் சங்கானை, மானிப்பாய் மற்றும் தனியார் ஆஸ்பத்திரிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மல்லாகம் விசாலாட்சி பாடசாலைக்குச் சமீபமாக இரண்டு ஷெல்கள் விழுந்து வெடித்தன. (ஓ-15-86-6)

## இறங்குதுறை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நான்கு குண்டுகள் வீசப்பட்டன.

இதனால் நேற்றுக் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் சில மணி நேரம் தடைப்பட்டது.

யாழ் நகலிருந்து பருத்தித்துறைக்குச் சென்றுகொண்டிருந்த செஞ்சிலுவைச் சங்க வாகனங்கள் ஆவரங்காலுடன் பயணத்தை நிறுத்திக் கொண்டன.

அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பிரதிநிதிகள் கொழும்பு தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு இது பற்றி ஆட்சேபம் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட நேரத்துக்குப் பின்னர் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகின.

பருத்தித்துறை இறங்குதுறையைச் சூழ உள்ள சுமார் 500 மீற்றர் பகுதியில் [பாதுகாப்பு வலயம்] தாக்குதல் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது என செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் அரசாங்கம் [illegible] இணக்கம் ஒன்றுக்கு ஒப்புக்கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. [ஓ-6-3]

# 440 தபால் பொதிகள், முத்திரைகள் யாழ். வந்தன

யாழ்ப்பாணம், நவ. 20

கொழும்பில் இருந்து 'விங்கோ றேட்ஸ்' கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட 440 தபால் பொதிகள் நேற்று யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டன.

இந்தப் பொதிகளில் பதிவுத் தபால்கள், வெளிநாட்டுக் கடிதங்கள், வெளிநாட்டுப் பார்சல்கள், சஞ்சிகைகள் ஆகியனவும் அடங்கி இருந்தன.

இதேவேளை—

எட்டு லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகளும், யாழ்–தபால் திணைக்களத்துக்கென 10 லட்சம் ரூபாவும் வந்து சேர்ந்துள்ளன. (ஓ-3-6)

## பருத்தித்துறை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மந்திகை மெதடிஸ்த மிஷன் பாடசாலையை நோக்கி ஆறு குண்டுகள் வீசப்பட்டன. ஆசிரியர்களும், மாணவர்களும் பாதுகாப்புத் தேடிக் கொண்டதால் தெய்வாதீனமாக உயிரிழப்புகள் ஏற்படவில்லை. பாடசாலைக்கு அருகிலுள்ள சில வீடுகளும் சேதமுற்றன.

உருத்திரா ரூபா (13 வயது), தம்பையா சிவபாக்கியம் (57 வயது) ஆகியோர் காயமடைந்து, மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

### ஓராம் கட்டையில்

இரண்டாவது தடவையாக காலை 10 மணிக்கு வந்த பொம்மர்கள் ஓராம் கட்டைப் பகுதியில் அடுத்தடுத்து குண்டுகளை வீசின.

இதனால் பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கக்கிளை சேதமடைந்தது. அங்கிருந்த பல பொருள்கள் நாசமாகின.

இந்தத் தாக்குதலின் போதும் வீடுகள் சில சேதமுற்றன. லொறி ஒன்றும் சேதமானது.

மாலிச் சந்தியைச் சேர்ந்த எஸ். சிறீதரன் [25 வயது] காயமடைந்தார். [ஓ-94-118 3]

## தமிழீழ...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளது.

தகைமை வாய்ந்தவர்களைக் கொண்டே தமிழீழ தேசியக் கொடியை ஏற்றுவிக்க வேண்டும். நாளை காலை 9 00 மணிக்கு ஏற்றப்படும் கொடி மாவீரர்நாளன 27-11-90 இரவு 7.00 மணிக்கு இறக்கப்படும்—

கொடிக் கம்பங்கள் ஒரேசீராக 20 அடி உயரத்தைக் கொண்டதாகவும், நேரானதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் தேசியக் கொடி ஏற்றப்படும் இடங்கள் புனிதப் பிரதேசமாகப் பேணப்படுதல் வேண்டும் — என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் கேட்டுள்ளன. [அ]

## இரு சிப்பாய்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ.20

கடந்த 11 ஆம் திகதி மாலை 2 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் முறக்கொட்டாஞ்சேனையிலிருந்து வந்தாறுமூலை நோக்கிச் சென்று கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய சினைப்பர் தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. [உ]

## ஷெல்லுக்கு பலி

காரைநகர். ஆலடியில் கடந்த வியாழக்கிழமை ஷெல் வீச்சுக்கு இலக்காகி காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்த இளம் பெண் ஒருவர் நேற்று மரணமானார்.

சண்முகம் தனேஸ்வரி (24 வயது) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இவர் மன்னாரிலிருந்து அகதியாக வந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

## தாட்சரின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளனர்.

முதற்கட்ட வாக்களிப்பின் போது தாட்சருக்கு 175 எம். பிக்களும் ஹெஸெல்ட்லைனுக்கு 125 எம் பிக்களும் வாக்களிப்பர் என்றும்—

80 எம். பிக்கள் நடுநிலை வகிப்பர் என்றும் தெரிகிறது.

தாட்சர் தொடர்ந்து பதவியில் நீடிக்க இந்த ஆதரவு போதாது என்று கூறப்படுகிறது

இந்தநிலை ஏற்படுமானால் இரண்டாம் கட்ட வாக்களிப்பு இடம்பெறலாம் என்றும்—

அப்போது தாட்சருக்குப் பதிலாக தற்போது வெளியுறவு அமைச்சராக உள்ள டக்ளஸ் ஹேர்ட், மைக்கல் ஹெஸல்டைனுடன் போட்டியிடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ–எ)

# மரண அறிவித்தல்கள்

## தாமோதரம்பிள்ளை நடராசா

மல்லாகம் உபதபாற்கந்தோரில் தபாற் சேவகராகக் கடமை புரிந்த தாமோதரம்பிள்ளை நடராசா (19-11 90) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் யோகநாயகியின் அன்புக் கணவரும், செந்தில் குமரன், துஷ்யந்தி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (20 11-90) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகத்தில் உள்ள அன்னாரின் வீட்டில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:

பொ பாலசிங்கம் (மைத்துனர்)

நரிசுட்டான்,
மல்லாகம்.

[14656]

## கணபதிப்பிள்ளை குணநாயகம்

(உரிமையாளர் அமரா ரேடேஸ், கஸ்தூரியார் வீதி, -யாழ்ப்பாணம்.)

தெல்லிப்பழையை பிறப்பிடமாகக் கொண்டவரும் மாரியம்மன் ஒழுங்கை திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கணபதிப்பிள்ளை குணநாயகம் அவர்கள் 18-11-90 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதிகளின் புதல்வனும், அமராவதியின் அன்புக் கணவரும், குமரநாயகம், கௌரி [ஆசிரியை. புத்தளம்], சுமங்கலி, அமரநாயகம், [ஜேர்மனி], சீதை, சுவநந்தினி, சுகந்தினி, சுபாங்கினி, சமரநாயகம், சுபலட்சுமி, மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தவநாயகம், நவநாயகம், இராசமணி, தவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-11-90 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மனைவி, பிள்ளைகள்

மாரியம்மன் ஒழுங்கை,
திருநெல்வேலி.

(14816)

# மரண அறிவித்தல்

## இராமசாமி பரந்தாமன்

இராமசாமி பரந்தாமன் அகாலமரணமானார். அன்னார் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகுமார், கிருஷ்ணகுமார், சாந்தி, சுபாசினி, ராஜன், சசிக்குமார், சுபாகினி, ராயு, செல்வி, ஜெயா, கண்ணன், ராசாத்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (20-11-90) இன்று 11. 00 மணியளவில் 48, 5 ஆம் ஒழுங்கையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:

ப. ராயு

48, 5 ஆம் ஒழுங்கை,
அரசடி றோட்,
நல்லூர்.

(15657)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20 - 11 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org